| O.S.No. 236/2017 | PW1 : திரு. ராமசாமி நாடார்<br>த/பெ. திரு. குருசாமி நாடார் | 08-01-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்துக்களை மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களை ஒட்டிதான் 4, 5 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் அச்சொத்துக்களுக்கு முன்னால் உள்ளது. மேற்படி மனைப்பிரிவுகளை நகராட்சியிடம் அங்கீகாரம் பெற்றுதான் விற்பனை செய்தோம். மனைப்பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்படவில்லை, தற்போதும் நடைமுறையில்தான் உள்ளது. அந்த அங்கீகாரம் நடைமுறையில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் உள்ளேன்.

2. வழக்கு சொத்துக்களில் மனைப்பிரிவு அமைப்பதற்கு முன்பாக அதற்கு வழி வேண்டும் என்று சொல்லி நகராட்சியின் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அந்த வழி சம்மந்தமாக இருதரப்பினருக்கிடையே சமரசம் செய்யப்பட்டு வழி ஏற்படுத்தப்பட்டது. வழிக்கு தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரையை தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் அது எங்கு உள்ளது என்று தெரியவில்லை. அந்த வழக்கு எண் ஞாபகம் உள்ளதா என்றால் வழி எங்களுக்கு சாதகமாக கிடைத்ததால் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

3. அந்த தீர்ப்புரை எனக்கு பாதகமானது என்பதால்தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள், அதனை நீக்குவதற்குத்தான் சமரச கமிட்டி உருவாக்கப்பட்டு அதன்மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. வழிநடையானது யாருக்கு சொந்தம் என்று வழக்கு நடத்தினார்கள் என்றால் 2 பேர் வேண்டுமென்றே தகராறு செய்தார்கள், அதனால் வழக்கு போட்டேன். அந்த இடம் கன்னியம்மன் கோவிலுக்கு சொந்தம் என்று பிரச்சனை செய்தார்கள்.

4. மொத்தமாக 4 ஏக்கர் 85 சென்ட்டினை நானும் எனது தம்பிகளும் வாங்கி அதற்குதான் மனைப்பிரிவு அங்கீகாரம் பெற்றோம். மொத்தம் 4 ஏக்கர் 90 சென்ட்டில் 5 சென்ட் பிரதிவாதிகளுக்கு சொந்தம். நானும் எனது தம்பி துரை, தனசேகர் ஆகியோர் தனித்தனியாக லேஅவுட் போட்டோம். மொத்தமாக சேர்ந்துதான் 4 ஏக்கர் 85 சென்ட் எங்களுடையது, மீதமுடைய 5 சென்ட் பிரதிவாதிகளினுடையது.

5. நாங்கள் கிரையம் பெற்ற இடத்தைவிட அதிகமான விஸ்தீரனத்தில் லேஅவுட் போட்டதால் எங்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேலும், அங்கீகாரத்திற்கு பொது சாலையில் தொடர்பு இருக்க வேண்டும் என்றாலும், அந்த தொடர்பு இல்லாததால்தான் எங்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. ஒரு மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு உரிமை மூலம் குறித்த சரியான ஆவணங்கள் இருந்தால்தான் அந்த அங்கீகாரமானது நிரந்தரமாக்கப்படும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விஷயங்களை எனது வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா எண். 30/2005, தாவா எண். 20/2005, தாவா எண். 115/2002, தாவா எண். 196/2002, A.S.No. 03/2012, 04/2012, 05/2012, 06/2012, O.S. 126/2014 ஆகிய வழக்குகளில் அசல் வழக்கானது முன்சீப் கோர்ட்டிலும், மேல்முறையீடானது சார்பு நீதிமன்றத்திலும் நடந்தது என்றால் சரிதான். முழுமையான விஷயங்களை வழக்கில் சொல்லியிருந்தால் எனக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்திருக்காது என்று சொன்னால் சரியல்ல.

(4, 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காகவும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காகவும் ஒத்திவைக்கப்படுகிறது.))

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**